**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 183/2023**

**நாள்: 02.03.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 9

2024ம் ஆண்டு மார்ச் திங்கள் 02ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு. ஜெகதீஸ்வரன் என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெகதீஸ்வரன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( எதிரி சுப்ரமணியன் என்ற அஜித் ஆஜர் )

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது மண்டபம் காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணியாற்றி வருகிறேன். வழக்கு சம்பவ காலத்தில் உச்சிப்புளி காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 18.04.2023ம் தேதி உச்சிப்புளி காவல்நிலையக்குற்ற எண். 113/2023 பிரிவுகள் 174Crpc @ 302 இதச வழக்கில் சம்பவத்தின் போது உடனிருந்த பால்பழனி என்பவருடைய கைபேசி எண் 8012646742 என்ற எண்ணிலிருந்து வழக்கின்

எதிரியான சுப்ரமணியன் என்ற அஜித் என்பவருடைய போன் எண்ணான 9677817386 என்ற போன் எண்ணிற்கு போன் செய்து வரச்சொன்னதாக கூறியதன் அடிப்படையில், காவல் ஆய்வாளர் மேற்சொன்ன இரு எண்களையும் நான் நோடல் ஆபிசரிடம் CDR அறிக்கை கேட்டு கடிதம் கொடுத்து, நோடல் ஆபிசர் உச்சிப்புளி காவல் நிலைய Emailற்கு CDR அறிக்கையை அனுப்பிவைத்தார். அந்த CDR அறிக்கையை நான் கணினியிலிருந்து பிரிண்ட் எடுத்து 65B சான்றிதழுடன் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

அரசுத்தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .

## முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

## சாட்சிகளின் வாக்குமூலம்

## (அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)

**அமர்வு வழக்கு எண். : 183/2023**

**நாள்: 02.03.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 10

2024ம் ஆண்டு மார்ச் திங்கள் 02ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு. மணிகண்டன் என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( எதிரி சுப்ரமணியன் என்ற அஜித் ஆஜர் )

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது இராமேஸ்வரம் துறைமுகம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். வழக்கு சம்பவ காலத்தில் உச்சிப்புளி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வந்தேன். கடந்த 19.04.2023ம் தேதி 13.30 மணியளவில் உச்சிப்புளி காவல் நிலைய குற்ற எண். 113/2023 பிரிவு 174 CrPC வழக்கில் அரசு மருத்துமவனையிலிருந்த

இறந்த நபரான காளிமுத்து த/பெ முத்து, இருட்டூரணி, இரட்டைஊரணி அஞ்சல், இராமநாதபுரம் என்பவரின் பிரேதத்தை உச்சிப்புளி காவல் ஆய்வாளர் அவர்கள் பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்று வேண்டுகோள் கடிதத்தை கொடுத்து பிரேதத்தை அடையாளம் காண்பித்து, மருத்துவர் பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை அவர்களது உறவினர் வசம் ஒப்படைத்தேன். 29.05.2023 ம் தேதியன்று இறந்த நபரின் உள்ளுறுப்புகளையும், வேண்டுகோள் கடிதம் பெற்று பெற்று இராமநாதபுரம் வட்டரா தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.</u>

மறு விசாரணை இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 183/2023**

**நாள்: 02.03.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 11

2024ம் ஆண்டு மார்ச் திங்கள் 02ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய டாக்டர். லெட்சுமி பிரியா என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | டாக்டர். லெட்சுமி பிரியா | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( எதிரி சுப்ரமணியன் என்ற அஜித் ஆஜர் )

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்சமயம் இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். டாக்டர் வினோதினி என்பவரை எனக்கு நன்கு தெரியும். அவர் என்னுடன் பணிபுரிந்தார் என்ற அடிப்படையில் அவரது கையொப்பமும் எனக்கு நன்கு தெரியும். அவர் தற்சமயம் மகப்பேறு விடுப்பில் உள்ளார். கடந்த 19.04.2023ம் தேதியன்று அதிகாலை 03.15 மணியளவில் இராமநாதபுரம் மாவட்டம் இருட்டூரணியை

சேர்ந்த காளிமுத்து என்பவரை அவரது மனைவி ராணி என்பவர் சிகிச்சைக்காக கொண்டு வந்துள்ளார். அவரை பரிசோதனை செய்த பொழுது அவருக்கு தலையின் வலது பக்கத்தில் 4 x 2 x 1 செமீ அளவில் Laceration Injury இருந்தது என்று சொல்லப்பட்டுள்ளது. டாக்டர் வினோதினி கொடுத்த இறந்துபோன நபருக்கான விபத்துப்பதிவேடு அ.தசா.ஆ.6 ஆகும். ஆவணங்களின் அடிப்படையில் இந்த சாட்சியத்தை அளித்துள்ளேன்.

கடந்த 19.04.2023 ம் தேதியன்று மதியம் 01.50 மணிக்கு உச்சிப்புளி காவல் நிலைய ஆய்வாளர் மேற்படி பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை நான் பெற்று, அதே தினம் மதியம் 02.00 மணிக்கு நான் பிரேதத்தின் மீது பரிசோதனை செய்தேன். நான் பிரேதத்தை பரிசோதனை செய்த பொழுது பிரேதம் மல்லார்ந்த நிலையில் இருந்தது. பிரேதத்தினுடைய கைகால்கள் விறைப்புத்தன்மை இருந்தது. அவரை நான் பிரேத பரிசோதனை செய்த பொழுது கீழ்கண்ட உட்புற மற்றும் வெளிப்புற காயங்கள் இருந்தன. அவைகள்.

**வெளிப்புற காயம்**

5 x 4 x 2 செமீ அளவுள்ள ஒரு Laceration injury முன் தலையில் தென்பட்டது.

**உட்புறக்காயங்கள்**

1. அவருடைய தலையை பிளந்து பார்த்த பொழுது அவருடைய மூளைக்குள் இரத்தக்கசிவு மூன்று இடத்தில் தென்பட்டது. அவை ஒன்று சிறுமூளைக்கு அருகிலும், மற்ற இரண்டு பெருமூளையின் வலதுபக்கத்திலும் இடது பக்கத்திலும் தென்பட்டது.

2. மண்டை ஓட்டில் 10 செமீ அளவுள்ள fracture injury தென்பட்டது.

பிரேதத்தை பரிசோதனை செய்த பொழுது பிரேத பரிசோதனைக்காக உடல் உள்ளுறுப்புகள் சேமித்து வைக்கப்பட்டது. மேற்படி உடல் உள்ளுறுப்புகள்

இராசயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு கிடைக்கப்பெற்ற அறிக்கையின்படி உடல் உள்ளுறுப்புகளில் எவ்வித நச்சுத்தன்மையோ, மது அருந்தியதற்கான அடையாளங்களோ தென்படவில்லை.

உடல் உள்ளுறுப்புகளின் அறிக்கையை பெற்று அதன் அடிப்படையில் மேற்படி இறந்துபோன நபருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தில் இறந்ததாக எனது இறுதி அறிக்கையில் சொல்லியுள்ளேன். நான் கொடுத்த பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.7 மற்றும் இறுதி அறிக்கை அ.த.சா.ஆ.8 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

மேற்படி உடல் உள்ளுறுப்புகளான இரைப்பை, குடல், இதயம், நுரையீரல், கல்லீரல், மண்ணீரல் ஆகியவற்றை நான் சேமித்து வைத்தேன். நான் பிரேத பரிசோதனை செய்த பொழுது இரைப்பையில் எதுவும் திரவப்பொருள் இருந்ததா என்றால் திரவப்பொருள் எதுவும் தென்படவில்லை.

மது அருந்தியிருந்து 3 மணிநேரம் கழித்து ஒரு நபருக்கு இறப்பு ஏற்பட்டால் அந்த மதுவானது இரைப்பையில்தங்காது என்றும், அது இரத்த நாளம் மற்றும் சிறுநீருடன் சென்றுவிடும் என்று சொன்னாலும் சரிதான். ஒரு நபர் குடிபோதையில் கடினமான கல் போன்ற பொருளின் மீது விழுந்தால் எனது பிரேத பரிசோதனை அறிக்கையில் சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். மேற்படி நபரானவர் கடினமான கல் போன்ற பொருளின் மீது விழும் பொழுது எனது அறிக்கையில் சொல்லியுள்ள மண்டை ஓட்டில் ஏற்பட்டுள்ள காயம் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு.

பிரேத பரிசோதனை அறிக்கையில் நான் பிரேத பரிசோதனை செய்வதற்கு முன்பாக எத்தனை மணி நேரத்திற்கு முன்பாக இறப்பு ஏற்பட்டிருக்கும் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.

விறைப்புத்தன்மை வந்ததனால் இறப்பின் நேரம் நான் குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை. காலநிலைக்கு ஏற்ப பிரேதத்தின் மீது விறைப்புத்தன்மை மாற வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .